# சிம்சோன்

**சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்**

**1**

படங்களுடன்

ஆனால் ஒரு மனிதனால்
தனக்குள்ள
எல்லாவற்றையும்
தேவனுக்கு ஒப்புவிக்க
மட்டும் முடியுமானால்,
இப்பொழுது
தேவையானது எல்லாம்
அவ்வளவு தான்.

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: மறக்கப்பட்ட மலைப்பிரசங்கம், 61-0425E

**நீங்கள் உங்களிடத்திலுள்ள எந்த பாகத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதை மாத்திரமே தேவனால் உபயோகிக்க முடியும் என்று உங்களுக்குத் தெரியும்.**

நீங்கள் பாருங்கள், நான் கூறினபடி, அதை நான் நம்புகிறேன், ஒரு நாள், ஏதோவொரு இடத்தில்... நான் வித்தியாசமான இடங்களில், காலை நேர கூட்டங்களிலும், பிற்பகல் கூட்டங் களிலும், இன்னும் என்னவாக இருந்தாலும், அதிலே தான் அதிகம் பேசுகிறேன்...?...

4. ஆனால் நான் இதைச் சொன்னேன், நீங்கள் ஒப்புக்கொடுப்பதையே தேவனால் உபயோகிக்க முடியும்.

**சிம்சோனைப் போல, சிம்சோன் தன்னுடைய இருதயத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. அவன் அதைத் தெலீலாளுக்குக் கொடுத்து விட்டான்.**

ஆனால் அவன் தன்னுடைய பலத்தைத் தான் தேவனுக்குக் கொடுத்தான், அவனுடைய பலத்தை மாத்திரமே தேவனால் உபயோகிக்க முடிந்தது. அவ்வளவு தான்.

ஆனால் ஒரு மனிதனால் தனக்குள்ள எல்லாவற்றையும் தேவனுக்கு ஒப்புவிக்க மட்டும் முடியுமானால், இப்பொழுது தேவையானது எல்லாம் அவ்வளவு தான்.

நீங்கள் உங்கள்-உங்கள் சரீரத்தை ஒப்புக்கொடுக்க முடியுமானால், தேவன் உங்கள் சரீரத்தை உபயோகிப்பார்.

நீங்கள் உங்கள் சிந்தையையோ, உங்கள் இருதயத்தையோ, அது என்னவாக இருந்தாலும் அதை ஒப்புக்கொடுக்க முடியுமானால், உபயோகிக்கும்படி நீங்கள் தேவனுக்குக் கொடுப்பதை அவர் உபயோகிப்பார்.

அவ்விதமாக ஒப்புக்கொடுக்கும்படியாகக் காணக்கூடிய யாரோ ஒருவரை கண்டுபிடிக்கும்படியாக அவர் தேடிக் கொண்டிருக்கிறார்.

நீங்கள் உங்களிடத்திலுள்ள எந்த பாகத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதை மாத்திரமே தேவனால் உபயோகிக்க முடியும் என்று உங்களுக்குத் தெரியும்.

கூட்டங்களில் ஒரு
போதும் பணத்திற்காக
பிச்சையெடுக்க
மாட்டேன் என்று
தேவனிடம் நான்
வாக்களித்தேன்

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: 56-01-01 ஏன் ஜனங்கள் அலைகழிக்கப்படுகிறார்கள்? (உள்ளான இளைப்பாறுதல்)

9. 1946-ம் ஆண்டு நான் கூடாரத்தை விட்டு வெளி ஊழியங்களுக்குச் சென்ற போது அங்கு பணத்தைக் குறித்ததான பெரிய தொந்தரவுகள் உண்டாகும் என்று நான் அறிந்தேன்.

ஏனெனில் இத்தகைய கூட்டங்களில் பணமானது அதிக அளவில் சம்பந்தப்பட்டிருந்தது.

ஆகவே நான் கர்த்தரிடம், “இந்தக் கூட்டங்களில் என் முழு இருதயத்தோடும் உமக்கு ஊழியம் செய்வேன்” என்று வாக்களித்திருந்தேன்.

ஒரு மனிதனை கர்த்தர் சிறிதளவு ஆசீர்வதிக்கும் போது மூன்று முக்கியமான

காரியங்களான பணம், பெண், புகழ் என்பவை அவனைத் திரும்பவும் அவனுடைய பழைய நிலைமைக்குக் கொண்டு வந்து விடுகின்றன என்பதை நான் கவனித்திருக்கிறேன்.

வேதத்தில் பாலாக் என்பவன் தீர்க்கதரிசியாகிய பிலேயாம் என்பவனுக்கு அதிகமான பணத்தைக் கொடுக்க முன் வந்த போது, அந்த பணத்தின் காரணமாக பிலேயாம் தன்னுடைய வரத்தை விற்றுப் போட்டான் என்று பார்க்கிறோம் (இச்சம்பவம் உங்களுக்குத் தெரிந்த ஒன்றாகும்)

10. சிம்சோன், தெலிலாளிடம் தன்னை விற்றுப் போட்டான்.

இந்தப் பெண் அவனை தன் மடியிலிருத்தி, அவன் தன்னிடமுள்ள கர்த்தரின் இரகசியத்தை வெளியிடும் வரை அவனை மயக்கினாள்.

11. சவுல் புகழுக்காக தேவ வரத்தை விற்றுப் போட்டான்.

அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தான். (தீர்க்கதரிசிகளில் ஒருவனாக அவன் எண்ணப்பட்டான் என்று வேதம் கூறுகிறது).

இன்னொருவரைக் காட்டிலும் தன்னை பெரியவனாக்க விரும்பி புகழுக்காக அவன் விழுந்து போனான்.

12. மனிதன் விழுந்து போகத் தக்கதான இந்த மூன்று முக்கியமானகாரியங்களை நான் வேதத்திலிருந்து கண்டு, எல்லா நேரங்களிலும் இந்த மூன்று காரியங்களை நான் தவிர்க்கத்தக்கதாக நம்முடைய பரலோகப் பிதாவை நோக்கி வேண்டுதல் செய்தேன்.

13. கூட்டங்களில் ஒரு போதும் பணத்திற்காக பிச்சையெடுக்க மாட்டேன் என்று தேவனிடம் நான் வாக்களித்தேன்.

அது மட்டுமல்ல, காணிக்கை தட்டை ஜனங்கள் மத்தியில் அனுப்பி (இத்தகைய காணிக்கையின் மூலம் பல ஆயிர டாலர்கள் கிடைக்கும் என்று நான் அறிந்திருந்தேன்) கூட்டங்களுக்குத் தேவையான பண உதவியை நான் பெற்றுக் கொள்ளும் அளவிற்கு அவர் என்னைக் கைவிடுவாரென்றால், நான் ஊழியத்தை விட்டு விட்டு என் வீட்டிற்குத் திரும்பி விடுவேன் என்றும் கர்த்தரோடு ஒரு உடன்படிக்கை செய்திருந்தேன்.

14. இந்தக் காரியத்தில், யாரையும் எந்த விதத்திலும் வற்புறுத்தாமல் என் பணத் தேவையை அவர் அற்புத விதமாக சந்தித்தார்.

ஜனங்கள் பணம் தரத் தக்கதாக சற்று அவர்களை நிர்பந்திக்க நான் அனுமதிக்காததினால் கூட்டத்திற்கு ஒழுங்குகள் செய்யும் மூன்று அல்லது நான்கு நிர்வாகிகள் தங்கள் வேலையையும்

இழந்து விட்டனர். இத்தகைய காரியத்தில் எனக்கு நம்பிக்கை கிடையாது.



# சிலநேரங்களில் தேவனுடைய வழிகள் மனிதனுக்கு எவ்வளவு முட்டாள்தனமாக இருக்கின்றன என்பதைக் கவனியுங்கள்.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 53-11-11 ஆயத்தம்

48. சிலநேரங்களில் தேவனுடைய வழிகள் மனிதனுக்கு எவ்வளவு முட்டாள்தனமாக இருக்கின்றன என்பதைக் கவனியுங்கள். அவர் எப்படியாக காரியங்களைச் செய்கிறார்.

இப்பொழுது, நாம் உதாரணத்திற்காக சிம்சோன் என்ற பெயருடைய ஒரு மனிதன் அங்கே இருந்ததை எடுத்துக்கொள்ளப்போகிறோம். தேவன் அவனுடன் இடைப்பட்டுக்கொண்டிருந்தார்.

இப்பொழுது, அனேக ஜனங்கள்... என்று எண்ண முயற்சிக்கிறார்கள். உளவியல் அறிஞர்கள் களஞ்சியத்தின் கதவுகளைப் போன்று தோற்றமளிக்கும் தோள்களுடன் சிம்சோனின் படத்தை வரைவதை நான் கண்டிருக்கிறேன்.

ஏன், இங்கிருந்து அந்த ஆர்கன் இசைக்கருவிவரையான அகன்ற தோள்களுடன் கூடிய ஒரு மனிதன் ஒரு சிங்கத்தைக் சொல்வதை காண்பது எனக்கு விசித்திரமாக இருக்காது.

ஏன், நிச்சயமாக அவன் ஒரு சிங்கத்தை கொன்றிருக்கின்றான். அவன் எப்படியாக பட்டணத்தின் கதவுகளை பெயர்த்துக் கொண்டு நடந்து சென்றான், ஏன் நிச்சயமாக, அது எளிதானது.

49.ஆனால் சிம்சோனைக் குறித்த ஒரு விசித்திரமான காரியம் உள்ளது.

அவனைக் குறித்த என்னுடைய கருத்தை நீங்கள் அறிய விரும்புவீர்களானால், அவன் ஒரு சிறு, சுருள் கருளான தலைமுடியையுடைய குள்ளனாகவும், ஐந்து-ஏழு ஜடை முடிகள் அவனுடைய முகத்தை சுற்றிலும் தொங்கிக் கொண்டிருக்கிறவனாயும், அம்மாவின் சிறு பையனாகவும், ஒரு சிறு பெண் தன்மை

கொண்ட சிறுவனாகவும் (sissy) தெருவில் வந்து கொண்டிருந்தான்.

ஒரு சிங்கத்தை கொல்லும் அதைப்போன்ற ஒரு மனிதனை அவர்கள் கண்ட போது, அதுதான் அவர்களை பயமுறுத்தியது.

ஆனால் அவர்கள் இம்மனிதன் அங்கே வருவதை கண்டபோது... ஏன், அவன் கர்த்தருடைய ஆவியானவர் அவன் மேல் வருவது வரை அவன் அப்படியே அவ்வளவு உதவியற்றவனாகவே இருந்தான்.

கர்த்தருடைய ஆவி அவன் மேல் வந்தபோதோ, என்னே, அந்த சிறு தோள்கள் நேராகி, அவன் அந்த சிங்கத்தைப் பிடித்து அதைக் கொன்று போட்டான். கர்த்தருடைய ஆவி அவன் மேல் வந்தபோது, அவன் அவ்வாறு செய்தான்.

50. ஒரு நாளில் பெலிஸ்தியர்களின் கையினின்று இஸ்ரவேலரை விடுவிக்க சிம்சோன் தேவனுடைய அருளப்பட்ட பாதையாக இருந்தான்.

ஒருநாள் அவன் ஒரு-ஒரு பெரிய பெலிஸ்திய படையால் இக்கட்டுக்கு உள்ளானான்; ஆயிரம் பெலிஸ்தியர்கள் அவன் மேல் (வந்தனர்), அவனிடம் எதுவும் இல்லாதிருந்தது.

அவனிடம் என்ன இருந்தது? அவன் ஒரு ஈட்டியை வைத்திருந்தாலும், அதைக்கொண்டு அவனால் சண்டையிட முடியாது. எனவே அவன் சுற்றுமுற்றும் நோக்கினான். அங்கே ஒரு கழுதையின் தாடை எலும்பு இருந்தது.

நீங்கள் அறியும் முதலாவது காரியம் என்னவெனில், தேவனுடைய ஆவி அவன் மேல் வருகிறார், அவன் கழுதையின் அந்த தாடை எலும்பை

எடுத்து, ஆயிரம் பெலிஸ்தியர்களைக் கொன்று போட்டான். அல்லேலூயா.

51. இன்றிரவு உங்களுக்கருகில் கழுதையின் ஒரு தாடை எலும்பை காட்டிலும் அதிகமானது கிடக்கிறது. அது சரியே. நாம் எழுந்து அதைக்குறித்து ஏதோவொன்றைச் செய்வோம். நாம் இந்தப் பழைய கட்டில்களையும், தூக்கு படுக்கைகளையும் (stretchers), சக்கர நாற்காலிகளையும், கக்கதண்டங்களையும் (crutches) விட்டு விட்டு, 'அது பிசாசை சேர்ந்தது. நான் அதனுடன் இனிமேல் எதையும் செய்யமாட்டேன்' என்று கூறுவோம். அது சரியே. இயேசு கிறிஸ்துவின் வார்த்தை தான் சரியென்று நான் உரிமை கோருகிறேன். ஜீவிக்க அல்லது மரிக்க, நான் அதனுடன் இருக்கிறேன். அது சரியே.

அவருடன் வரிசையில் ஒன்றாக சேர்ந்து போ. உங்களுடைய தேவன்

கொடுத்திருக்கும் சிலாக்கியங்களை உரிமை கோருங்கள்.

பிசாசுக்கு எந்த உரிமையும் கிடையாது.

அவனுக்கு சட்ட ரீதியாக எந்த விசுவாசியின் மீதும் ஒரு அதிகாரமும் கிடையாது.

கல்வாரியில் அவனுடைய உடைமைகளை அவன் இழந்து, அவை அவனிடமிருந்து பறிக்கப்பட்டன.

இயேசு கிறிஸ்து அவன் கொண்டிருந்த யாவற்றையும் கொள்ளையிட்டு (robbed), கீழே தம்முடைய பெயரால் கையெழுத்திடப்பட்ட ஒரு காசோலை புத்தகத்தை ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுக்கிறார்.

‘என் நாமத்தினால் நீங்கள் எதைக் கேட்டாலும், நான் செய்வேன்’ உங்களுடைய தனிப்பட்ட சொத்து.

எந்த காசோலையிலும் உங்களுடைய பெயரை கையொப்பமிடவோ அல்லது அதை நிரப்பவோ (fill) நீங்கள் துணிவு கொள்ளுங்கள்.

'கர்த்தாவே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனக்கு சுகம் தேவை.' இயேசுவின் நாமத்தை உபயோகப்படுத்தி எழும்பி நில்லுங்கள். அல்லேலூயா. பரலோகத்தின் மொத்த வங்கியும் அது நியாயமானதென தெரிவிக்கும். அது சரியே. நிச்சயமாக.

'ஓ, ஆனால் சகோதரன் பிரான்ஹாமே, நாம் அவ்வளவு மகத்தான மருத்துவமனைகளைக் பெற்றிருக்கிறோம்.' அவர்கள் உங்களுக்காக என்ன செய்துள்ளனர்? மருத்துவமனைகள் சரி தான்; மருத்துவர்களும் சரிதான், ஆனால் உங்களைக் குறித்து என்ன? தேவன் ஒரு விசுவாசியான உங்களுக்கு அந்த

காசோலை புத்தகத்தைக் கொடுத்து விட்டார்; அதில் கையொப்பமிடுங்கள்.



# இன்றிரவு உங்கள் கையிலிருக்கிறது என்ன?

நீங்கள் எதை உங்கள் கையில் கொண்டிருந்தாலும் அதைத் தேவனுடைய மகிமைக்கென்று உபயோகப்படுத்துங்கள்.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: 55-06-11 உன் கையிலிருக்கிறது என்ன?

இன்றிரவு உங்கள் கையிலிருக்கிறது என்ன?

நீங்கள் எதை உங்கள் கையில் கொண்டிருந்தாலும் அதைத் தேவனுடைய மகிமைக்கென்று உபயோகப்படுத்துங்கள்.

132. சிம்சோன் என்னும் பெயரைக் கொண்ட ஒரு நபரை அங்கே என்னால் காணமுடிகின்றது.

அவன் ஒரு நாளிலே அங்கே சென்றான் (பெலிஸ்தர்கள் சிறிது தீங்கை அங்கே விளைவித்திருந்தனர்).

சிம்சோன் சில நரிகளின் வால்களை ஒன்று சேர்த்துக்கட்டி அவர்களுடைய பயிர்களை சுட்டெரித்துப் போட்டான்.

அப்பொழுது அந்த இஸ்ரவேலர் அங்கே வந்து அவனைப் பிடித்து "உன்னை நாங்கள் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்' என்று கூறினர்.

133. அப்பொழுது அவர்கள் அவனை அங்கே கொண்டு போய் அவனை சில கயிறுகளால் கட்டி அவனை அங்கே கொண்டு சென்றார்கள்.

அங்கே பெலிஸ்தர்கள் அவனை அவமானப்படுத்தி துன்புறுத்த எத்தனித்திருந்தனர்.

அவனை அப்படிச் செய்தபோது, கர்த்தருடைய ஆவி அவன் மீது வந்தது. ஆமென். அதுதான் வித்தியாசத்தைப் பிறப்பித்தது.

கர்த்தருடைய ஆவி அவன் மீது வந்திருப்பதை அவன் உணர்ந்தபோது அவன்கையில் அப்பொழுது ஒன்றுமே இல்லாதிருந்தது. அவன் கீழே பார்த்தான்.

அங்கே கழுதையின் தாடை எலும்பு கிடந்தது. அவன் அந்த தாடையெலும்பை தன் கையில் எடுத்து அதினாலே ஆயிரம் பெலிஸ்தரைக் கொன்று போட்டான். ஆமென். அவன் கையில் வைத்திருந்தது அவ்வளவே தான்.

134, அவன் முன்னே சென்று “இதோ, சற்றுப் பொறு. கீழே இருக்கின்ற இந்த கழுதைத் தாடை எலும்பை நான் எடுத்து அது அழுத்தத்தைத் தாங்குமா இல்லையா என்று நான் சோதித்துப் பார்க்கட்டும்” என்று கூற வேண்டிய அவசியம் அவனுக்கு இருக்கவில்லை.

அந்த விதமான காரியங்களைப் பற்றி சிந்திக்கக் கூட அவனுக்கு நேரம் இருக்கவில்லை.

ஒரு அவசர நிலைமையாய் அவனுடைய நிலைமை இருந்தது, பெலிஸ்தர் அவன் மீது வந்திருந்தனர். அவன் செய்ய வேண்டி இருந்த ஒன்றே

ஒன்று என்னவென்றால் ஒரு தாடை எலும்பை எடுத்து சண்டையிட வேண்டியது மாத்திரமே தான். அங்கே இருந்தது அது மாத்திரமே...

135. ஆகவே இன்றிரவில், நீங்கள் ஓடிச்சென்று இந்த காரியமானது என்னவென்று யோசித்துப் பார்க்க உங்களுக்கு நேரமே கிடையாது. நாளை இரவு எழுப்புதலானது முடிந்து விட்டிருக்கும். நாம் தேவனுடைய வார்த்தையை எடுப்போமாக. உங்களுடைய கையிலிருப்பது அதுவே. உங்களுக்குள்ளாக இருக்கின்ற எல்லாவற்றுடன் நாம் போரிடுவோமாக. ஆமென். தேவன் சிம்சோனுக்கு வெற்றியை அளித்தார்.

# நாம் கடைசிநாட்களில் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். அவள் இந்த வேதாகமத்தின்படி நேரத்தை காண்பிக்க வேண்டியவளாயிருக்கிறாள்.




வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: 57-03-24 ஏன் சில மக்களால் வெற்றியை காத்துக்கொள்ளமுடியவில்லை?

60. நமக்கு தேவனுடைய அன்பு அவசியமாயிருக்கிறது. அதுதான் முழு காரியத்தையும் கட்டுப்படுத்துகிறது. எனவே, உங்களுடைய கடிகாரம் அது நல்லதுதான். உங்களுடைய முக்கியமானதும் மற்றும் அதன் அங்க சுருள்வில்களும் நல்லது தான். உங்களுடைய சிறிய நொடியைக் காண்பிக்கும் முள், அதுவும் நல்லதுதான்; உங்களுடைய எல்லா சிறிய வரங்களும் இன்னும் ஒவ்வொரு காரியமும் அதுவும் நல்லது தான். ஆனால், சகோதரனே, நாம் அந்த முக்கியமான சுருள்வில்லை திரும்பவும் பெற்றுக்கொள்வோமாக. ஓ, என்னே.



எனவே கவனியுங்கள், அன்பு கிரியை செய்யத் தொடங்கும் போதுதான், அந்த முக்கிய சுருள்வில்லும் கிரியை செய்யத் தொடங்கும். அதன்பின் என்ன நடக்கும் என்று தெரியுமா? மெதொடிஸ்டுகள், 'வாருங்கள், பாப்டிஸ்டுகளே, நாமெல்லாரும் சேர்ந்து நடனமாடுவோம்" என்பார்கள். அது சரிதான். 'வாருங்கள், பிரிஸ்பிடெரியன்களே, பெந்தெகொஸ்துகளாகிய நீங்களும்,

எல்லோரும் ஒன்று சேர்ந்து நகரம் தழுவிய எழுப்புதலை பெற்றுக்கொள்வோம்.” அதுதான் காரியம்.

அதன்பின் அந்த முக்கிய சுருள்வில் கட்டுபாட்டை எடுத்துக் கொள்ளும். பரிசுத்த ஆவியானவர் அசைவாட துவங்குவார்.

அதன்பின் பாப்டிஸ்டுகள், நீங்கள் அந்நிய பாஷை பேசுவதினால் உங்களிடத்தில் வம்பு செய்யமாட்டார்கள், நீங்களும் அதில் ஒழுங்கு தவறி போகமாட்டீர்கள்.

அதன்பின் பிரிஸ்பிடேரியன்கள், பாப்டிஸ்டுகள், லூத்தரன்கள், எல்லோருமாக ஒட்டுமொத்த மகத்தான, பெரிய ஜீவனுள்ள தேவனுடைய சபையாக இயங்குவார்கள். அப்பொழுது அவள் வேதாகமத்தின்படி நேரத்தை காட்டுவாள். நிச்சயமாக.




ஓ, இக்காலத்தின் அடையாளங்கள். நாம் கடைசிநாட்களில் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். அவள் இந்த வேதாகமத்தின்படி நேரத்தை காண்பிக்க வேண்டியவளாயிருக்கிறாள். உங்களுக்கு தெரியும், எப்பொழுதாவது ஒரு முறைக்கு அந்த கடிகாரம் காய்ந்து போகுமானால், தேவன் ஒரு சொட்டு எண்ணெய்யை பரலோகத்திலிருந்து உங்களுக்கு இடுவார். அவர் அதற்கு முழுவதும் எண்ணெய்

இடுவார், அவளும் அதற்குபின் நன்றாக இயங்கத் தொடங்குவாள். ஆம் ஐயா, அப்படி நீங்கள் செய்யும் போது, அது நன்றாக இயங்கும்.



61. இப்பொழுது, கவனியுங்கள். ஒரு புதிதான இருதயம், ஒரு புதிதான ஆவி, பின்னர் என் ஆவியை உங்களுக்குள்ளாக

வைப்பேன். அதன் பின் நீங்கள் என் கட்டளைகளையும், என் நியாயங்களையும் கைக்கொள்வீர்கள். முக்கியமான சுருள்வில் இயங்க ஆரம்பித்து, ஆகாதென்று தள்ளப்பட்ட கல்லும், தேவனுடைய அன்பும் தேவனுடைய மக்கள் மத்தியில் திரும்பவும் கொண்டு வரப்படும் போது, அதன் பின் முழு தேவனுடைய சபையும், எந்த ஒரு சண்டை சச்சரவுமின்றி ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொள்வதை நீங்கள் காண்பீர்கள்.

இப்பொழுது, வேதாகமத்தில் தேவனுடைய ஊழியர்கள், 'நம்முடைய ஆண்டவர் வர தாமதிக்கிறார்“, என்று கூறினபோது, அவர்கள் ஒருவருக்கொருவர் தங்களை அழித்துக் கொண்டும், கடித்துக் கொண்டும், குழப்பிக் கொண்டும், எரிச்சலூட்டிக் கொண்டும் இருந்தனர். அவர்கள் அவ்விதமாய் இருப்பதை கர்த்தர் வந்தபோது அவர்களை கண்டுபிடித்தார். அவர்கள் விளக்கை

வைத்திருந்தனர். ஆனால் அவர்களிடத்தில் எண்ணெய் இல்லாமலிருந்தது. பாருங்கள். அவர்கள் அவ்விதமாய் இருந்ததால் காரிருளில் எறியப்பட்டனர்.

சகோதரனே, அசலானது இங்கே அருகில் இருக்கும்போது, ஏன் மாற்றுப் பொருளை (substitute) எடுத்துக் கொள்கிறாய்? இங்கே அசலான காரியம் அருகில் இருக்கும்போது, ஏன் வேறொன்றை எடுத்துக் கொள்கிறாய்?

எனவே தேவனுடைய அன்பாகிய கிறிஸ்துவானவர், அந்த முக்கிய சுருள்வில் உங்களுக்குள், உங்களுடைய இருதயத்திற்குள் கிரியை செய்யும்போது, அது இவ்விதமான ,,டிக்... என்ற கடிகார ஒலியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, நற்குணம், இரக்கம், சாந்தகுணம், விசுவாசம், தயை இவைகளை காண்பிக்க துவங்கும், ஓ, என்னே, பின்னர் அது இவைகளை

கொண்டு ,,டிக்... என்ற ஒலியை எழுப்பி சரியான நேரத்தை காண்பித்து கொண்டிருக்கும்.



62. அதன்பின் நீங்களும் உங்களுக்கு அது என்னவென்று அறிந்துகொள்வீர்கள் நீங்கள் கிறிஸ்துவோடு நுகத்தடியை கொண்டு பூட்டப்பட்டிருக்கும்போது, அது ஒரு போதும் உங்கள் கழுத்தை காயப்படுத்தாது. அதை சுமப்பதற்கு ஒரு

பாரமாய் அது இருக்காது. ஏனெனில் அது முழுவதும் சிறகுகளை கொண்டிருக்கும். அது லேசாய் இருக்கும். அதன் பாரங்கள் குறைவாயிருக்கும். அது உங்களுக்கு என்ன செய்யும் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். எவராவது ஒருவர் உங்களிடத்தில், 'ஏய், நீ அந்த பரிசுத்த உருளையர் (holy-roller) கூட்டத்துக்கு போகவில்லையா? நீ அங்கே போவதை நான் பார்த்தேன் என்று நினைக்கிறேன்“. 'சரி, ம்-ம்-ம்-ம்-ம், நான் உனக்கு சொல்லட்டும்...” அது உங்களை ஒருவிதமாக கொஞ்சம் புண்படுத்தும், காரணம் அந்த முக்கிய சுருள்வில் இயங்கவில்லை. அது சரிதான். ஆனால் அந்த முக்கிய சுருள்வில் இயங்க தொடங்கி, அந்த நபர் உங்களிடத்தில் வந்து, 'லிட்டி, நீ பரிசுத்த உருளையராக மாறிவிட்டாய் என்று நான் கேள்விப்பட்டேன்“, என்பான். நீங்களும் அந்த முக்கிய சுருள்வில்லை (mainspring)

பெற்றிராத போது, நீங்கள் அழுதுகொண்டே, 'ஜான், நான் உனக்கு சொல்லட்டும். நான் அந்த பழைய சிகரெட்டுகளை தூக்கிப் போட்டுவிட்டேன். அது எனக்கு தெரியும். நான் ரேடியோவில் கேட்டேன். எப்படியெனில்...” என்று சொல்வீர்கள்.

63. அன்றொரு நாளில், 'கடந்த உலக மகா யுத்தத்தில் நான்கு வருடத்தில் மக்கள் மரித்ததைக் காட்டிலும் இந்த வருடத்தில் அமெரிக்காவில், சிகரெட் பிடிப்பதினால் ஏற்படும் தொண்டை புற்றுநோயால் அதிகமானவர்கள் மரிப்பார்கள்,“ என்று நான் கேள்விப்பட்டேன். இருபக்கங்களிலும் மரித்ததைக் காட்டிலும் அதிகமானோர் அமெரிக்க ஐக்கிய நாட்டில் மரிப்பார்கள். நேற்றைய தினத்தில் வானொலியில் புற்றுநோயை குறித்து சொல்லப்பட்டதை நீங்கள் கேள்விப்பட்டீர்களா? புகைப்பிடிப்பதால் புற்றுநோய் ஏற்படும் என்று முற்றிலும்

நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் அதை ஏன் அவர்கள் நிறுத்தக் கூடாது? என்னதான் காரியம்? தொலைக்காட்சியிலும், இன்னும் மற்றெல்லாவற்றிலும் அப்படிப்பட்ட அருவருப்பான, இழிவான காரியங்கள் நிறைந்திருக்கிறது. ஏனென்றால் அப்படிப்பட்டவைகள் ஒருவகையான பெரிய பருந்துகளுக்கு அது தேவைப்படுகிறது. அது மிகவும் சரிதான். மிகவும் சரி. அப்படிப்பட்ட பருந்து வகையினிடத்தில் எந்த மரித்து போனதையும் குறித்து நீங்கள் பேசமுடியாது, காரணம் அவைகளைத் தான் அது புசிக்கிறது. அது சரிதான். ஒருமுறை அதனுடைய குணத்தை மாற்றிப்பாருங்கள். நிச்சயமாக அது அதை விட்டு விலகி இருக்கும். அது மிகவும் சரி.



ஓ, நான் கடினமாக பேசுகிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். நான் கடினமாக இருக்க வேண்டும் என்று இல்லை, நான் உங்களை நேசிக்கிறேன். ஆனால், சகோதரனே, நீங்கள் மறுபடியும் வனையப்படுவதற்கு முன், முதலாவது நீங்கள் உடைக்கப்பட வேண்டும். அது மிகவும் சரி. நாம் சத்தியம் என்னவென்பதை அறிந்திருக்க வேண்டும். நான் உங்களுக்கு வேதவசனத்தை மேற்கோள் காட்டுகிறேன். நிச்சயமாக.

64. அதன்பின் நீங்கள் அந்த பழைய நுகத்தடியை கொண்டு கிறிஸ்துவோடு பூட்டப்பட்டிருக்கும் போது, தேவனுடைய அன்பு உங்களுடைய இருதயத்திலிருந்து, பிரவாகித்து, அந்த முக்கிய சுருள்வில் இயங்கும்போது, யாரோ ஒருவர் உங்களிடத்தில், 'ஏய், நீ இனி குடிப்பதில்லை; நீ இனி புகைப்பதில்லை. நீ ஒருபரிசுத்த உருளையர் என்று நான் கேள்விப்பட்டேன்“, என்பார்கள். நீங்களும், 'அது சரிதான், சகோதரியே. ஓ, நான் அந்த பொக்கிஷத்தை கண்டுபிடித்திருக்கிறேன். அது என் உள்ளத்திற்கு மிக இனிமையாக இருக்கிறது. நானும் அதை உங்களிடத்தில் சொல்லியிருக்க வேண்டும் என்று விருப்பப்பட்டேன்”, என்பீர்கள். ஓ, ஆமாம், அதுதாமே சிலுவை முழுவதும் இறகுகளை வைக்கிறது.

பின்னர் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று உங்களுக்கு தெரியுமா? உங்கள்

மேல் வைக்கப்பட்ட அந்த பாரங்களை, நீங்கள் அதை சுமந்து செல்வீர்கள்.

எப்படியெனில் சிம்சோன் காசாவின் வெண்கல கதவுகளை சுலபமாக கொண்டு சென்றது போல இருக்கும்.

ஏனெனில், அதை அவன் ஒரு மூட்டையை தூக்கிக்கொண்டு செல்வது போல, ஒரு குன்றிற்கு கொண்டு சென்று, அதை அங்கு வைத்தான்.

எனவே உண்மையிலேயே அந்த முக்கிய சுருள்வில் உன் இருதயத்தில் இயங்கி தேவனுடைய அன்பு உன் இருதயத்திலிருந்து பிரவாகித்து செல்லும்போது, அவர்கள் உன்னை என்னதான் பெயர் வைத்து அழைத்தாலும், மேலும் அப்படி கூறுவதினால் அது அவர்களுக்கு ஒரு சிறு நன்மையும் செய்யாது.

அதை நீ கல்வாரி என்னும் பெயர் கொண்ட ஒரு குன்றிற்கு கொண்டு சென்று,

பின் அதை அங்கு வைத்து, அந்த நபருக்காக நீ ஜெபிப்பாய். அது சரிதான்.

அப்படிப்பட்ட மக்களிடத்தில் நீ அதை, இதை அல்லது வேறொன்றை குறித்து சண்டைசச்சரவு செய்து கொண்டு விவாதம் செய்து கொண்டு இருக்கமாட்டாய்.

65. ஏனெனில், நீ தேவனுடைய பிள்ளையாக மாறும்போது, அந்த பழைய காரியங்கள் ஒழிந்து போகின்றன. நீங்கள் அவரோடு கூட பூட்டப்பட்டிருக்கிறீர்கள், ஓ, தேவனுடைய இராஜ்ஜியத்தின் பிரஜைகளாக பூட்டப்பட்டு, அவரோடு கூட உடன் சுதந்தரவாளிகளாக இருப்பதை நீங்கள் அறிந்திருக்கும்போது, கிறிஸ்துவின் நுகத்தடியை அவரோடு கூடசுமப்பது எவ்வளவு சந்தோஷமாயிருக்கும். அது இலேசாயிருக்கும்.



இப்பொழுது, இது, இந்த அன்பு நமக்குள்ளாக வரும்போது, நாம் என்ன செய்வோம்? இங்கே அன்றொரு இரவு, எப்படி அந்த அன்பு வெளிப்படுத்தப்பட்டதென்றும், எப்படி அந்த பாரம் லேசாக காணப்பட்டதென்றும், எப்படி அந்த அன்பு பயத்தை வெளியே தள்ளினது என்று அதை பற்றி பிரசங்கித்தேன் என்று நான் விசுவாசிக்கிறேன். நீங்கள் அந்த அன்பை உங்களுக்குள்ளாக பெற்றிருக்கும் போது

நீங்கள் பீதியடையமாட்டீர்கள். 'நீங்கள் தேவனை அவருடைய வார்த்தையின்படி ஏற்றுக்கொள்ளும் போது, நீங்கள் சுகத்தை பெற்றுக் கொள்ள முடியும்“ என்று வேதாகமம் கூறுகிறது. அந்த அன்பு உங்களுக்குள் இருக்குமட்டும், நீங்கள் இந்த எல்லா காரியங்களையும் புறம்பே தள்ளி, ஒன்றிற்கும் கவலைப்படாமல் இருப்பீர்கள். காரியங்கள் சரிவர நடக்கவில்லையென்றாலும், அது ஒரு விஷயமே இல்லை. இன்னும் அந்த அன்பு உங்களிடத்தில் இருக்கிறது. பாருங்கள். அது உங்களை நிலையாக வைக்கிறது.



# சிம்சோன்

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

1

படங்களுடன்